Rajeswari. Nagalingam

கொலம்பியா ரிக்கார்டுகளில்

ஸ்ரீமதி

D. K. பட்டம்மாள்

பாடிய புதிய பாட்டுகள்.

(முதற்பாகம்)

பிரசுரம்: M. சாமிநாதன்.

ஸ்ரீமதி D.K. பட்டம்மாள்
பாடிய புதிய பாட்டுகள்.

முதற்பாகம்.

RECORD G. E. 853.

1. ஸ்ரீ முருகனை நீ அனுதினம் நினை
நெஞ்சே சஞ்சலம் தீரும்
ஷண்முகநாதன் சரவண ஜாதன்
சராசரம் தொழும் பாதன் திரு (முருகனையே)
சீரார் பழனித் தங்கமலையில் வளர்
தங்கமயில் வாகன வேலா
சம்புகுமார உமையாள் பால
குஹா குஹா என அன்பாய் (முருகனையே)
தேவர்கள் துயரறகிரீசன் நெற்றிக்
கண்ணிலெழும் குமார
வள்ளிமணாள கருணாஸிந்தோ
தீனதயாள தீனதயாள
மலரடி துணையென நம்பி
மாயோன் மால் மருகோனை--திரு (முருகனையே)

2. கோகுலம் யமுனைப்ருந்தாவனம் புரிந்த
தவமேத நிகிலனே
நந்தயசோதா நந்தனனெனவே
லீலைகள் பலபுரிந்தாய் (கோகுலம்)
தேவர்கள் வாழ மேதினிபாரம்
தீர்க்கவும் அருளாலே
தேவகி ஸ்ரீவஸுதேவர் தம்மைந்தனாய்
ஸ்ரீமதுரா நகரில்
வந்தவதாரஞ் செய்தருள் சௌரே
கம்ஸனை வதம் செய்தே
வெஞ்சிறையும் பவநோயுமகற்றிய
துவாரகை நாயகனே
காடு சென்று மாடுகன்று
மேய்த்தருள் மாயவனே
கோபியருள்ளமும் வெண்ணையுடன் கவர்
கள்வ நீ விளையாடும் (கோகுலம்)

RECORD G. E. 848.

இயற்றியவர் பாவநாசம் சிவன்

இராகம்-புன்னாகவராளி] பல்லவி [தாளம் ஆதி

3. சிவகங்கா நகர நிவாஸினி
ஸ்ரீராஜ ராஜேஸ்வரி மாமவ (சிவ)

சரணம்

அபயவரதேம்பமாயே—நிக
மாகணித விப்மே பரசிவஜாயே (சிவ)
வதனருசி விஜிதகமலே—உபய
பார்ச்வ விராஜித வாணீகமலே (சிவ)

கிளிக்கண்ணி

4. வள்ளிக் கணவன் பேரை
வழிப்போக்கர் சொன்னாலும்
உள்ளம் குழையுதடி—கிளியே
ஊனும் உருகுதடி
மாலை வடிவேலவர்க்கு
வரிசையாய் நானெழுதும்
ஓலைக்கிறுக்காச்சுதே—கிளியே
உள்ளமும் கிறுக்காச்சுதே
மாடுமனைப் போனாலென்ன
மக்கள் சுற்றம் போனாலென்ன
கோடிச் செம்பொன் போனாலென்ன—கிளியே
குரு நகைப் போதுமடி.
எங்கும் நிறைந்திருப்போன்
எட்டியும் எட்டாதிருப்போன்
குங்கும வர்ணனடி—கிளியே
குமரப் பெருமானடி.

RECORD G. E. 866

இராகம்-ஸிந்து பைரவி] [தாளம் ஆதி

5. 1 வைஷ்ணவ ஜனதோ தேனே கஹியே
ஜோ பீடபரா யீஜாணேரே
பாதீஹ்கே உபகாரசரே தோயே
மன அபிமானன ஆணேரே
2 ஸகல லோகமா சௌனே வந்தே
நிந்தா நகரீ கேணீரே
வாசகாசமன நிஸ்ச்சல ராகே
தனதன ஜனனீதேனிரே
3 ஸமத்ருஷ்டினே க்ருஷ்ண தியாகி
மாஸ்திரிஜேணே மாதரெ
ஜிஹ்வாதகீ அஸத்யனபோலே
பாதன நவஜாலே ஹாதரே

4 மோஹமாய வியாபே நஹிஜேண த்ருட
வைராக்யஜேண மனமாரே
ராம நாம ஸுந்தாவிலாகிஸகல
தீராததேனு தனுமாரே
5 வணலோ பினே கபடாஹிதசே
காமக்ரோத நிர்வார்யரே
பணே நரஸயும் தேனும் தர்சனம்
கர்த்தாகுல ஏததேரோ தார்யாரே

இராகம்-குந்தலவராளி] [தாளம் ஆதி

6. 1 பாரத புண்யபூமி-ஜயபாரத புண்யபூமி
யமுனை காவேரி கங்கையும் உன்பால்
இமயவர் தங்கும் இமாசல முன்பால் (பாரத)
2 முன்னை பழம்புகழ் சீர்வளர் ஓங்கும்
உன்னை நினைத்திடில் பாபம் நீங்கும்
பொன்னி வாணி அருள் செல்வர் புகழ்ந்த
பிரம்ம விஷ்ணு சங்கரனும் மகிழ்ந்த (பாரத)
3 தூயதங்கம் ஒளிகுன்றுவதுண்டோ
சூரிய சந்திரர்க்கோர் அழிவுண்டோ
தாயே உனது தவப்புதல்வன் காந்தி
தன்னால் நீ பெறுவாய் சுகசாந்தி (பாரத)

RECORD G. E 867

இந்துஸ்தானி மெட்டு

7. தேச சேவை செய்ய வாரீர்—விரைவாய்
தன்னலம் கருதி தாய்நாட்டை மறந்தால்
நானிலத்தோர் நகையாரோ—இந்த
நானிலத்தோர் நகையாரோ (தேச சேவை)
தீரவேண்டும் மாந்தர் துன்பம்
செய் உபகாரம் தெய்வத்திற்கின்பம்
வருவீர் ஆடவர் மாதரும் ஒன்றாய்
அன்புடன் அழைக்கின்றாள்—அன்னை
அன்புடன் அழைக்கின்றாள்—நம்மை
அன்புடன் அழைக்கின்றாள் (தேச சேவை

(இந்துஸ்தானி மெட்டு)

8. 1 பந்த மகன்று நம் திருநாடு உய்ந்திடவேண்டாமோ
அதிர்ந்தொலித்தல் கேளாய்—சங்கம்
ஆர்த்திடு முரசம் கேள்—எங்கும்
ஆர்த்திடு முரசம் கேள்
அடிமை வாழ்வில் ஆசையேனோ
விடுதலைபெற எழுவாய் (பந்தமகன்று)

2 தாயின் மணிக்கொடி வானிலுயர்ந்தே
சென்று பறந்திடவே அதன்கீழ் நின்று பணிந்திடுவோம்
ஜாதி மதம் முதல் பேத மறந்து
நமது மகாத்மா ஆணை உணர்ந்து
சத்திய மதனை பற்றியே நின்று
சமத்துவம் பெறுவோமே,
பாரத பூமியின் நாரியர் கற்பின் தீரமும் எவ்வுலகும்
புகழ்தொல் வீரமுணர்த்திடுவோம்
ஈரமும் நெஞ்சின் உதாரமும் வறியோர்க்
கிலையும் என்றும் தோகையாக்குண்டு
என்று விளங்கும் வென்றிதரு ஜெய
பேரிகை கொட்டுவோம்.

RECORD G. E. 909.

சினிமா "மகாத்மா காந்தி"யில்.

9.

ஆடுராட்டே சுழன்றாடு ராட்டே
சுழன்று சுழன்று சுழன்றாடு ராட்டே—இனி
சுயராஜ்யம் வந்ததென்று ஆடுராட்டே

1 பாபம் குறையுமென்று ஆடுராட்டே—இனி
பயங்கள் மறையுமென்று ஆடுராட்டே
கோபம் குறையுமென்று ஆடுராட்டே—நல்ல
குணங்கள் மிகுந்ததென்று ஆடுராட்டே

1 மேலான ஜாதியென்று மிக்கப்பேசி—மிக
மாறான காரியங்கள் செய்து வாழும்
மாலான ஜனங்களின் வஞ்சனையெல்லாம்—இனி
மாண்டுமடியுமென்று ஆடுராட்டே

3 பட்டணத்து வீதிகளில் சுற்றியலைந்து—மிகப்
பாடுபடும் கிராமத்துப் பத்தினிப் பெண்கள்
இஷ்டமுடன் தங்குடிசை நிழலிலிருந்து—நூல்
இழைத்துப் பிழைப்பாரென்று ஆடுராட்டே

4 வம்பளந்து வீண்பொழுது போக்கமாட்டார்—பெண்கள்
வாசலிலே கூட்டமிட்டுப் பேசமாட்டார்
அன்பமில்லை சோம்பியவர் தூங்கமாட்டார்—குடி
சுத்தப்படுமென்று சொல்லி ஆடுராட்டே

4 சாந்திபெருகுமென்று ஆடுராட்டே—மனச்
சாக்ஷிவிளங்குமென்று ஆடுராட்டே
காந்தி துலங்குமென்று ஆடுராட்டே—அந்தக்
காட்சி சுதந்திரமென்றாடு ராட்டே

10 1 காந்தியை நினைப்போமே—நல்
கதருடையை தரிப்போமே—என்றும்
சுதந்திரத்தை மதிப்போமே—ஈன
சுயநலத்தை மறப்போமே (நம்)
2 மாந்தர் யாரும் சமாதானமாகவே
மாநிலத்தில் மேன்மையாகவே
இந்திரலோகமும் எங்கள் நாட்டுக்கே
இணையில்லையென மகிழ்வோமே (நம்)
3 நாற்றிசையும் நாட்டொலி முழங்கவே
நமது அன்னையின் துயர்கள் நீங்கவே
போற்றி ஜெயவென இசைகள் பாடியே
வேற்றுமை ஒழித்து வாழ்வோமே (நம்)
4 பஞ்சம் தீர்ந்திட பாவம் நீங்கிட
பாரதர் புகழ் பாரில் ஓங்கவே
சஞ்சலங்கள் எல்லாமும் ஓடவே
சந்ததம் சுகம் பெறுவோமே (நம்)

RECORD G. E. 9?0

11 குழலோசைக் கேட்டாயோ—கிளியே—ஒரு
மழலைக் கூறவும் மறுக்கின்றாய்—விழி
சோர்ந்திடக் கண்ணீர் உகுக்கின்றாய்—இந்த
ஏழையை ஏனோ வெறுக்கின்றாய் (குழலோசை)
என் தங்கக் கூண்டை நீ விரும்பாயோ—அந்த
தாமரைக் கண்ணனை அறியாயோ—பேதை
மங்கையர் உள்ளக் கள்வனவன்—இங்கு
மையல் வந்தபின் மறைந்திடுவான்—எழில்
பைங்கிளியே உன் பவளவாய்த் திறந்தவன்
பெயர் ஒருதரம் கூறாயோ—அடி
பைங்கிளியே உன் பவளவாய்த்திறந்தவன்
பெயர் ஒருதரம் கூறாயோ (குழலோசை)

12 இன்ப கனவொன்று துயிலினில் கண்டேன் ஸகி—அந்த
நினைவினில் பரவசம் கொண்டேன் ஸகி
வெண்மணல் பரந்த நதிக்கரை தனிலே
தண் மதி விரித்த வெள்ளி நிலவினிலே
நான் கண்ட அற்புதம் என்னசொல்வேன் ஸகி—எந்தன்
கண்கள் செய்த தவம் நவில்வேன் ஸகி (இன்ப)
அங்கே தண்டை சதங்கை கொஞ்ச வந்தனே—நீல
கொண்டல் மேனித்திகழ நின்றனே—வெண்ணெய்
உண்டவாயில் முருவல் செய்தானே—அந்த
இன்பத்தில் என்னை மறந்தேன் ஸகி—பேர்

இன்பம் இதுவென உணர்ந்தேன் ஸகி
கண்ணன் குழலினை அழகாய்க் கையிலெடுத்தான்-அவன்
இதழினில் பொருத்தி இசைதொடுத்தான்—தெய்வத்
தமிழென அமுத கீதம் பொழிந்தான்—அப்பா
அனலில் மெழுகாய் உள்ளம் உருகியதே—அந்த
ஆற்று மணலும் நீராய்ப் பெருகியதே— (இன்ப)

RECORD G. E. 924

கோபால கிருஷ்ண பாரதியார் பாட்டு

இராகம்—கமாஸ்] பல்லவி [தாளம் ஆதி

13 எப்போ வருவாரோ எந்தன் கலிதீர

அனுபல்லவி

செப்பியதில்லை சிதம்பர நாதன்— (எப்போ)

சரணம்

நற்பருவம் வந்து காதலைத் தேடும்
கற்பனைகள் முற்ற காட்சிதந்தாள (எப்போ)
அற்ப சுகவாழ்வில் ஆனந்தம் கொண்டேன்
பொற்பதத்தைக் காணேன்—பொன்னம்பல வாணன்
பாலகிருஷ்ணன் போற்றி பணிந்திடும் ஈசன் [எப்போ
மேலே காதல் கொண்டேன்-வழிபடக்காணேன் {எப்போ

முத்துஸ்வாமி தீக்ஷதர் கீர்த்தனை.

இராகம்—குறிஞ்சி] பல்லவி [தாளம் ஜம்பை

14 ஸ்ரீவேணு கோபாலா—ஸ்ரீருக்மணி லோலா
ஸ்ரீதேவநாயக ஸ்ரீயம் தேஹி தேஹி—மதுமுராஹா (ஸ்ரீ)

அனுபல்லவி

தேவகி ஸுகுமாரா தீனஜனமந்தாரா
கோவர் தனோத்தாரா கோபயுவதி ஜாரா (ஸ்ரீ)

சரணம்

கோகுலாம்புதி ஸோம கோவிந்தனுத நாமா
ஸ்ரீகுஞ்சிதகாம சரித ஸத்யபாம
கோகநதபதஸோம குருகுஹஹிதப்ரியாம
ஸ்ரீகாதபோஹோம ஸ்ரீ ஜயந்தி நாம

மத்தியமகாலம்

ப்ரகாஸ் சரணபீம பாலிதார் ஜனெதாம
ப்ாகரி புனிதநாம பக்த யோகக்ஷேம (ஸ்ரீ)

எம். எஸ். எம். பிரஸ், நாகர்கோவில்.